**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 489/2018** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | **திருமதி.வள்ளி** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.12.2024

1, 2 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் விராதனூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் 1, 2 எதிரிகளைத் தெரியும். இன்று நீதிமன்றத்திற்கு ஆஜர் ஆகாத 3 வது எதிரியையும் தெரியும். எதிரிகள் அனைவரும் எனக்கு ஒன்று விட்ட அக்கா பிள்ளைகள். எனக்கு மகன் உறவு முறை வேண்டும். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தை நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலீசார் விசாரணையின் போது, 15.04.2014 ம் தேதி 12.00 மணிக்கு எங்கள் ஊர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன்பு வைத்து சண்முகமும், ஆயிபிள்ளையும் நடந்து சென்ற போது, ஆஜர் எதிரிகளும் மற்றொரு இளம்சிறார் முனியாண்டீ என்பவரும் வழிமறித்து ஏண்டீ தேவடியா மகன்களா எங்கள் மீது கொடுத்த கேஸை வாபஸ் வாங்கவில்லை என்றால் உங்களை அடித்தே கொன்றே விடுவோம் என்று சொல்லி 2 எதிரிகளும் இளம்சிறார் முனியாண்டியும் உருட்டுக்கட்டையால் சண்முகத்தின் இரண்டு கைகளிலும் உடலிலும் மாறி மாறி அடித்தும், 1 வது எதிரி அரிவாளைதிருப்பிப் பிடித்து சண்முகத்தின் கையில் மாறி மாறி அடித்து கொடுங்காயத்தை உண்டு பண்ணியும் தடுக்க வந்த ஆயிப்பிள்ளையை 1 வது எதிரி அரிவாளால் இத்தோடு செத்து தொலைந்து போடி என்று கூறி ஓங்கி வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியதாகவும், அதனால் ஆயிபிள்ளை இறந்து போய்விட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும்

எதிரிகளும் உறவினர்கள் என்றும், அதனால் எதிரிகளோடு சமாதானமாக போய்விட்டோம் என்றும், எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2024.12.16 13:59:03 +0530

அமர்வு நீதிபதி,

மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC NO. 489/2018 |
| Deposition of witness for | : | PW : 5 |
| Name | : | திரு. சக்தி |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.12.2024**

1, 2 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் விராதனூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் 1, 2 எதிரிகளைத் தெரியும். இன்று நீதிமன்றத்திற்கு ஆஜர் ஆகாத 3 வது எதிரியையும் தெரியும். எதிரிகள் அனைவரும் எனக்கு மாமன், மச்சான் உறவு முறை வேண்டும். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தை நான் பார்க்கவில்லை. நான் வெளியூரில் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலீசார் விசாரணையின் போது, 15.04.2014 ம் தேதி 12.00 மணிக்கு எங்கள் ஊர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன்பு வைத்து சண்முகமும், ஆயிபிள்ளையும் நடந்து சென்ற போது, ஆஜர் எதிரிகளும் மற்றொரு இளம்சிறார் முனியாண்டீ என்பவரும் வழிமறித்து ஏண்டீ தேவடியா மகன்களா எங்கள் மீது கொடுத்த கேசை வாபஸ் வாங்கவில்லை என்றால் உங்களை அடித்தே கொன்றே விடுவோம் என்று சொல்லி 2 எதிரிகளும் இளம்சிறார் முனியாண்டியும் உருட்டுக்கட்டையால் சண்முகத்தின் இரண்டு கைகளிலும் உடலிலும் மாறி மாறி அடித்தும், 1 வது எதிரி அரிவாளைதிருப்பிப் பிடித்து சண்முகத்தின் கையில் மாறி மாறி அடித்து கொடுங்காயத்தை உண்டு பண்ணியும் தடுக்க வந்த ஆயிப்பிள்ளையை 1 வது எதிரி அரிவாளால் இத்தோடு செத்து தொலைந்து போடி என்று கூறி ஓங்கி வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியதாகவும், அதனால் ஆயிபிள்ளை இறந்து போய்விட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும்

எதிரிகளும் உறவினர்கள் என்றும், அதனால் எதிரிகளோடு சமாதானமாக போய்விட்டோம் என்றும், எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2024.12.16 13:59:22 +0530

அமர்வு நீதிபதி,

மகளிர் நீதிமன்றம்,மதுரை